செ.வெ.எண்: நாள்:11.01.2022

நாமக்கல் மாவட்டம்

**விவேகானந்தா மருத்துவ கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் படுக்கை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

-----

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு விவேகானந்தா மருத்துவ கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் படுக்கை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., அவர்கள் (10.01.2022) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது வேகமாக பரவி வரும் ஒமைக்ரான் வகை கொரோனா தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாத்திடும் வகையில் சிகிச்சை அளிக்க ஏதுவாக திருச்செங்கோடு விவேகானந்தா மருத்துவ கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்பு சிகிச்சை மையத்தில் 250 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார்.

கொரோனா நோய்த்தொற்று தற்போது அனைத்து பகுதிகளிலும் வேகமாக பரவி வருகிறது. பொதுமக்கள் முகக்கவசம் அணிதல், கிருமி நாசினி மற்றும் சோப் போட்டு அடிக்கடி கைகளை சுத்தம் செய்திட வேண்டும். வெளியில் செல்லும் போது தனிமனித இடைவெளியை கடைப்பிடித்திட வேண்டும். சென்ற ஆண்டுகளை விட தற்போது உள்ள ஒமைக்ரான் வகை கொரோனா வைரஸ் மிக வேகமாக அதிக நபர்களுக்கு பரவுகின்றது. உலக நாடுகள் அனைத்தும் இதனால் மிகுந்த பாதிப்பிற்குள்ளாகி வருகின்றன. நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா தொற்று பாதித்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 600 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிறப்பு சிகிச்சை மையங்கள், வட்டார அளவில் உள்ள தரம் உயர்த்தப்பட்ட 14 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தலா 30 படுக்கை வசதிகள், அரசு மருத்துவ கல்லூரி, விவேகானந்தா மருத்துவ கல்லூரி மற்றும் அரசு மருத்துவமனைகள் உள்ளிட்ட இடங்களில் மொத்தம் 2,480 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு கொரோனா நோய்த்தொற்றின் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியான பரிசோதனை செய்து கொண்டு, தனிமைப்படுத்தி கொண்டால் நோய்த்தொற்றின் பரவலை தடுத்திடமுடியும். பொதுமக்கள் தங்களுக்கு அருகில் உள்ள அனைத்து பரிசோதனை மையங்களிலும் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேற்கொண்டு பொதுமக்களுக்கு சிகிச்சை வசதிகள், மருந்துப்பொருட்கள் தேவை மற்றும் சந்தேகங்கள் இருப்பின், நாமக்கல் மாவட்ட கட்டளை அறைக்கு (வார் ரூம்) 1077, 04286-299135, 04286-299137, 04286-299139, 8220402437 ஆகிய எண்களில்

தொடர்பு கொண்டு, விவரங்களை தெரிவித்தால் தேவையான அனைத்து மருத்துவ ஏற்பாடுகளும் உடனடியாக செய்து தரப்படும்.

இந்த ஆய்வின் போது திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் திருமதி.தே.இளவரசி, துணை இயக்குநர் (சுகாதாரம்) மரு.ஜெ.பிரபாகரன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலா் திரு.சி.சீனிவாசன், திருச்செங்கோடு வட்டாட்சியா், திருச்செங்கோடு வட்டார வளர்ச்சி அலுவலா் உட்பட அரசுத்துறை அலுவலா்கள் கலந்து கொண்டனா்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலா், நாமக்கல் மாவட்டம்.